R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2018-2020
Licensed to Post Without Pre-Payment Registration No. TN/WPP-169/SR/2018-2020
Date of Publication: 10th of Every Month
Posted on 10th of Every Month at Batlagundu Post office.
October 2020




தி வேர்ட் ஆப் கிரைஸ்ட் பாடல் புத்தகம் வத்தலக்குண்டு கிறிஸ்துவின் சபையார் வெளியிட்ட புத்தகம் நீங்கள் கூடுகிற சபையில் இருக்க வேண்டிய புத்தகம் தேவைப்படுவோர் கீழ்கண்ட முகவரிக்கு எழுதிப்பெற்றுக் கொள்ளலாம்.

The Word of Christ
D/5 Rajan Nagar
Batlagundu -624 202
DINDIGUL DT

Ten Song Books
Just
Rs300/-



சங்கீதம் 148:7-12

Cell : 94435 58041
6379350509
E-Mail arjunanglory@gmail.com

Office Address
The Word of Christ,
D/5 Rajan Nagar
Batlagundu -624202,
DINDIGUL DIST
TAMIL NADU INDIA

**Our TV Program:**
Every Tuesday 6.00 P.M on Tamilan TV &
Every Saturday 8.00 P.M on Nambikkai TV


YouTube: the word of christ

To

Postman Remarks (If Undelivered):
- Refused
- No such person
- Address insufficient
- Left without instructions
- Deceased

Our Postal Address:
THE WORD OF CHRIST
POST OFFICE BOX No. 5
BATLAGUNDU - 624202
S.INDIA

மகாத்மா காந்தியின் பிறந்தநாள்
அக்டோபர் 2, 1869.
2007 ம் ஆண்டு, ஐக்கியநாடுகள் சபை,
காந்தியின் பிறந்த நாளை
'அகிம்சைக்கான சர்வதேச தினம்'
என அறிவித்தது.



Owned and published by B.Arjunan from
17.2.102 D/5 Rajan Nagar, Batlagundu -624 202
and printed by R.Sathiyamoorthy at Bharathi press,
14/13/24 Melamanthai Street,Batlagundu - 624 202.
Editor and Publisher B.Arjunan



தனிப்பிரதி ரூ.5/-
ஆண்டு சந்தா ரூ.50/-

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

மரம் 20 | அக்டோபர் 2020 | கனி 11



THE WORD OF CHRIST

கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும்
பரிபூரணமாக வாசமாயிருப்பதாக
கொலோசெயர் 3:16

ஆசிரியர்
B. அர்ஜுனன்

# வேதபாடம்

"வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறவைகளும் அவைகளே" யோவான் 5:39




பாடம் : 11

தலைப்பு : குற்ற நிவாரணபலி – Trespass offering

வேத வாசிப்பு : லேவியராகமம் 5:1-6

1. குற்றமுள்ளவன் - லேவி.5:4-6
2. பிரமாணம் ஒன்றே - லேவி.7:7

| | | |
|---|---|---|
| U | Unison | ஒன்றுமை |
| N | New Vision | புதிய பார்வை |
| I | Indeed | உண்மையாக |
| T | Threefold cord | முப்புரிநூல் |
| Y | Yoke | நுகத்தடி |


**Unity**
**ஒற்றுமை**



the word of christ இருபத்து நான்கு மணிநேரமும் உலகமெங்கும் YouTube வழியாக பார்த்து சத்தியத்தை அறிந்துகொள்ளுங்கள்

YouTube தொடர்புக்கு: 9443558041, 6379350509





**THE WORD OF CHRIST**
Monthly Magazine
Editor
B.ARJUNAN


**தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்**
மாத இதழின் உள்ளே...
ஆசிரியருரை,
செய்திகள்: ஜெ.சி.சோட், பெட்டி சோட்,
மற்றும்
வேதபாடம், வாலிபர் பகுதி, பெண்கள் பகுதி
சிறுவர் பகுதி, வேத அறிவுப்போட்டி இன்னும் பல...

"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15

"The Churches Of Christ Salute you" Romans 16:16


Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA




## வேத அறிவுப் போட்டி எண்: 242

போட்டியாளர்கள் கவனத்திற்கு,

கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் இம்மாதம் இறுதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன் எழுதி அனுப்பவும். விடை யை பின்வரும் மாத இதழ்களில் காண்க.

1. கர்த்தருடைய சமுகத்தினின்று விலகி ஓடிப்போகிறவன் என்று அறிவித்தவன் யார்?
2. இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் எப்படிப்பட்டவர்கள்?
3. செம்மையாய் நடக்கிறவனுக்கு என் வார்த்தைகள் நன்மை செய்யாதோ என்று எந்த தீர்க்கதரிசியைக் கொண்டு கர்த்தர் பேசினார் ?
4. மனுஷன் ஓய்வு நாளுக்காக உண்டாக்கப்பட்டவனா?
5. யூதாவே, உன் பண்டிகைகளை ஆசரி; உன் பொருத்தனைகளைச் செலுத்து என்று எந்த தீர்க்கதரிசியைக் கொண்டு கர்த்தர் சொன்னார்?
6. பலவான்களை ஆசனங்களிலிருந்து தள்ளி, தாழ்மையானவர்களை உயர்த்தினார் என்ற பெண் யார்?
7. திரளான தண்ணீர் குவியலாகிய சமுத்திரத்துக்குள் உமது குதிரைகளோடே நடந்து போனீர் என எந்த தீர்க்கதரிசி தரிசனமாய்க் கண்ட பாரம்?
8. தேவனை ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை, பிதாவின் மடியிலிருக்கிற ஒரேபேறான குமாரனே அவரை என்னசெய்தார்?
9. உன் தேவனாகிய கர்த்தர் உன் நடுவில் இருக்கிறார் அவர் எப்படிப்பட்டவர்?
10. சீட்டு போட்டு பதினொரு அப்போஸ்தலருடனே சேர்த்துக் கொள்ளப்பட்டவன் யார்?

## வேதாகம ஆய்வு... 27

## இஸ்ரவேல் - Israel



1. யாக்கோபுக்கு கொடுக்கப்பட்ட பெயர் – ஆதி.32:28
2. எபிரேய ஜனத்துக்கு பொதுவானது இப்பெயர் – யாத்.3:16
3. யூதாவிலிருந்து பிரிந்த ராஜ்யத்துக்கும் இப்பெயர்
4. பாபிலோனிய சிறையிருப்புக்கு பிற்பாடு இஸ்ரவேலர்கள் என்று தொடர்ந்து அழைக்கப்பட்டனர்
5. கிறிஸ்துவும் அவர்களில் பிறந்தார் – ரோம.9:5

சிறுவர் பகுதி

## இரண்டாவது முறையாக விற்கப்பட்டவன்

வேத பகுதி: ஆதியாகமம் 37:1-39:5



**யோ**சேப்பு தன் சகோதரர்களாலே மீதியானியரிடத்தில் 20 வெள்ளிக்காசுக்கு விற்கப்பட்டான். அவர்கள் அவனை எகிப்திற்குக் கொண்டு போனார்கள். அவனுக்குத்தான் எவ்வளவு மனக்கஷ்டம் இருந்திருக்கும். தன் குடும்பம், இடம், நண்பர்கள், உறவினர்கள் எல்லாவற்றையும் இழந்தவனாக மீதியானியரின் கையில் ஒரு கைப்பொம்மையாக இருந்தான். அவனுக்கு துன்மார்க்கமான செயல் பிடிக்காது. ஆகையால் 17 வயதிலே தன் சகோதரருடனே ஆடுகளை மேய்த்துக்கொண்டிருக்கும் போது தன் சகோதரர்களுடைய துன்மார்க்கத்தை தன் தகப்பனுக்குச் சொல்லிவருவான். அவன் தகப்பனாகிய யாக்கோபோ முதிர் வயதிலே யோசேப்பு தனக்குப் பிறந்ததினால் தன் பிள்ளைகள் எல்லாரிலும் யோசேப்பை அதிகமாய் நேசித்து அவனுக்குப் பலவருணமான அங்கிகளை செய்து உடுத்துவான். இதையெல்லாம் கண்ட அவன் சகோதரர்கள், அவன்மீது பொறாமை கொண்டு அவனைத் தூக்கி விற்றுப்போட்டார்கள்.

தங்களுடைய தவறை மறைக்க ஒரு வெள்ளாட்டு கடாவை அடித்து, யோசேப்பின் அங்கியை இரத்தத்தில் தோய்த்து தங்களுடைய தகப்பனிடத்துக்கு அனுப்பி இதை நாங்கள் கண்டெடுத்தோம், இது உம்முடைய குமாரன் அங்கியோ அல்லவோ பாரும் என்று சொல்லச்சொன்னார்கள். யாக்கோபு அதைக் கண்டு, இது என் குமாரனுடைய அங்கிதான், ஒரு துஷ்டமிருகம் அவனைப் பட்சித்துப்போட்டது, என்று புலம்பினான். அந்த மீதியானியரோ யோசேப்பை எகிப்திலே பார்வோனின் பிரதானியும் தலையாரிகளுக்கு அதிபதியுமாகிய போத்திபார் என்பவனிடத்தில் விற்றார்கள். முதலாவது தன் சகோதரர்கள் அவனை 20 வெள்ளிக்காசுக்கு விற்றுப்போட்டார்கள். பின்பு அந்த மீதியானியர் போத்திபாருக்கு விற்றுப்போட்டார்கள். இதை கண்ட யோசேப்பு எப்படி மனங்கசந்து அழுதிருப்பான் என்பதை சற்று தியானித்துப்பாருங்கள். கர்த்தர் அவனோடு இருந்தபடியால் அவன் எகிப்து தேசத்திலே உயர்த்தப்பட்டான்.

அப்படியே உங்களோடும் கர்த்தர் இருக்க நீங்கள் விரும்பினால் இந்த யோசேப்பைப் போல துன்மார்க்கத்துக்கு விலகி நலமான காரியத்தைச் செய்யுங்கள். கர்த்தர் யோசேப்பினிமித்தம் அந்த எகிப்தியன் வீட்டை ஆசீர்வதித்தார்; வீட்டிலும் வெளியிலும் அவனுக்கு உண்டானவைகள் எல்லாவற்றிலும் கர்த்தருடைய ஆசீர்வாதம் இருந்தது. உங்கள் நிமித்தம் உங்களுடைய தேசம், உங்களுடைய வீடு ஆசீர்வதிக்கப்பட யோசேப்பைப் போல மாறுங்கள்.

**மனப்பாட வசனம்**

“வாலிபன் தன் வழியை எதினால் சுத்தம் பண்ணுவான்? உமது வசனத்தின்படி தன்னைக் காத்துக்கொள்ளுகிறதினால் தானே” - சங்.119:9

**நடப்புச்செய்திகள்**


- ஆதாரில் மாற்றம் செய்ய ரூ 100 செலுத்தவேண்டும்.
- வாஷிங்டன்: உலகிலேயே ரூ 15 லட்சம் கோடி மதிப்புள்ள சொத்து உடைய உலகின் முதல் நபராக அமேசான் நிறுவனர் ஜெஃப் பிசோஸ் முன்னேறியுள்ளார்.
- தனது ஊழியர்களுக்கு 6 மில்லியன் பங்குகளை சுமார் ரூ44 கோடி கொடுத்து அசத்தியுள்ளார் நிகோலா கார்பரேசன் நிறுவனரும் தலைவருமான டுரெசர் மில்டன்.



தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்
THE WORD OF CHRIST
புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்
மரம் - 20 அக்டோபர் -2020 கனி - 11

ஆசிரியருரை

## தேவனுடைய வலதுபாரிசத்தில்
## At God`s Right Hand




ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து இப்பொழுது தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார் என்று நாம் வேதத்தில் வாசிக்கிறோம். இயேசுகிறிஸ்து தம்முடைய ஊழியத்தை முடித்து அவர் பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்வேளை வந்தது அப்பொழுது அவருடைய சீஷர்கள் பார்த்துக்கொண்டிருக்கையில் உயர எடுத்துக்கொள்ளப்பட்டார்; அவர்கள் கண்களுக்கு மறைவாக ஒரு மேகம் அவரை எடுத்துக்கொண்டது. அவர் போகிறபோது அவர்கள் வானத்தை அண்ணாந்துபார்த்துக் கொண்டிருக்கையில், இதோ, வெண்மையான வஸ்திரம்தரித்தவர்கள் இரண்டுபேர் அவர்களருகே நின்று; கலிலேயராகிய மனுஷரே, நீங்கள் ஏன் வானத்தை அண்ணாந்துபார்த்து நிற்கிறீர்கள்? உங்களிடத்தினின்று வானத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப்போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார் என்றார்கள். "அவர் பரலோகத்திற்குப் போய், தேவனுடைய வலதுபாரிசத்தில் இருக்கிறார்; தேவதூதர்களும் அதிகாரங்களும் வல்லமைகளும் அவருக்குக் கீழ்ப்பட்டிருக்கிறது" (1பேது.3:22). எல்லாவற்றிற்கும் மேலாக பிதாவாகிய தேவன் அவரை உயர்த்தினார். அவர் தம்மைத்தாமே தாழ்த்தினபடியால் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தினார்.

தேவனிடத்தில் இருக்கிற தேவதூதர்கள் இயேசுவுக்கு கீழ்ப்படிந்திருக்கிறார்கள். ஆகையால் அவர் தம்முடைய சீஷனாகிய பேதுருவிடம் பேசும்போது; "நான் இப்பொழுது என் பிதாவை வேண்டிக்கொண்டால், அவர் பன்னிரண்டு லேகியோனுக்கு அதிகமான தூதரை என்னிடத்தில் அனுப்பமாட்டாரென்று நினைக்கிறாயா? என்றார்" (மத்.26:53). பிதாவாகிய தேவன் குமாரனுடைய வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளுகிறார். அவர் ஜெபிக்கும்போதும் ஜனங்கள் மத்தியில் அற்புதங்களைச் செய்யும்போதும் பிதாவின் நாமம் மகிமைப்படும்படியாகவே செய்தார். மேலும், "தமது முதற்பேறானவரை உலகத்தில் பிரவேசிக்கச் செய்தபோது; தேவதூதர்கள் யாவரும் அவரைத் தொழுதுகொள்ளக்கடவர்கள் என்றார்" (எபி.1:6). ஆகையால் தேவதூதர்கள் இயேசுவின் வார்த்தைக்குக் கட்டுப்பட்டவர்களாயிருந்தார்கள். முழுஅதிகாரமும் இயேசுவினிடத்தில் இருந்தது. இந்த அதிகாரத்தை பிதாவாகிய தேவன் இயேசுகிறிஸ்துவுக்கு கொடுத்திருந்தார் என அறிகிறோம். "இவர் தேவதூதரைப் பார்க்கிலும் எவ்வளவு விசேஷித்த நாமத்தைச் சுதந்தரித்துக்கொண்டாரோ, அவ்வளவு அதிகமாய் அவர்களிலும் மேன்மையுள்ளவரானார்" என எபிரெயர் 1:4-

ம் வசனத்தில் படிக்கிறோம். வானத்திலும் பூமியிலும் அவர் உயர்த்தப்பட்டார். ஒவ்வொரு தேவதூதனுக்கும் வல்லமைகள் கொடுக்கப்பட்டிருக்கிறது. காபிரியேல், மிகாவேல் போன்ற தேவதூதர்களைப் பற்றி படிக்கிறோம். இந்த தூதர்களுக்கு மேலான வல்லமையும் அதிகாரமும் இயேசுவுக்கு கொடுக்கப்பட்டிருந்தது.

அதைப்போல பூமியிலே அவருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருந்தது. இயேசு தம்முடைய சீஷர்களுக்கு பிரதான கட்டளை கொடுக்கும்போது; "அப்பொழுது இயேசு சமீபத்தில் வந்து, அவர்களை நோக்கி: வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது" என்றார் (மத்.28:18). இந்த அதிகாரத்தை பிதாவாகிய தேவன் அவருக்குக் கொடுத்திருந்தார். ஏனெனில்; "எந்த மனுஷனும் மேலான அதிகாரமுள்ளவர்களுக்குக் கீழ்ப்படியக்கடவன்; ஏனென்றால், தேவனாலேயன்றி ஒரு அதிகாரமுமில்லை; உண்டாயிருக்கிற அதிகாரங்கள் தேவனாலே நியமிக்கப்பட்டிருக்கிறது" (ரோம.13:1). சகல அதிகாரத்திற்கும் காரணமானவர் பிதாவாகிய தேவன். அவருக்கு சகல அதிகாரமும் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் பூமியிலே கர்த்தருடைய பிள்ளைகள் மேலான அதிகாரமுள்ளவர்களுக்குக் கீழ்ப்படிந்திருக்கவேண்டும். எடுத்துக்காட்டாக பாருங்கள் இயேசுவும் இராயனுக்குரியதை இராயனுக்கும் தேவனுக்குரியதை தேவனுக்கும் கொடுங்கள், வரி கொடுப்பது நியாயம் என்றார். அவரும் ஒரு வெள்ளிப்பணத்தை வரியாக செலுத்தினார் என பார்க்கிறோம். நான் தேவனுடைய பிள்ளை, இவர்களுக்கு எதற்கு நான் வரிகொடுக்கவேண்டும் என்று ஒரு அதிகாரத்தை எதிர்த்து நிற்க முடியாது. ஏனெனில் அது தேவனால் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அந்நியர்களும், புறஜாதிகளும் நாட்டை ஆட்சிசெய்தாலும், தேவனுடைய மனுஷன் அந்த அந்நியர்களுக்கும் புறஜாதிகளுக்கும் கீழ்ப்படிந்திருக்க போதிக்கப்படுகிறான்.

மேலும் "பூமியிலே பாவங்களை மன்னிக்க மனுஷகுமாரனுக்கு அதிகாரம் உண்டென்பதை நீங்கள் அறியவேண்டும் என்று சொல்லி, திமிர்வாதக்காரனை நோக்கி: நீ எழுந்து, உன் படுக்கையை எடுத்துக்கொண்டு, உன் வீட்டுக்குப் போ என்றார்" (மத்.9:6). அவன் எழுந்து படுக்கையை எடுத்துக்கொண்டு நடந்தான் பார்த்தவர்கள் ஆச்சரியப்பட்டு மனுஷகுமாரனுக்கு இந்த அதிகாரத்தை கொடுத்தவரை மகிமைப்படுத்தினார்கள். இந்த விதமான அதிகாரம் கொடுக்கப்படாமல் ஒரு மனுஷனுடைய பாவங்களை மன்னிக்க முடியுமா? கர்த்தராகிய இயேசு அதை ஜனங்கள் மத்தியில் நிருபித்துக்காட்டினார். சகல அதிகாரமும் அவருக்குக் கொடுக்கப்பட்டிருந்தது. கடலையும் காற்றையும் அதடிட்னார் அங்கே அமைதல் உண்டாயிற்று. இன்றைக்கு உலகமே தங்களுடைய கையில் இருப்பது போல அநேகர் நடந்துகொள்ளுகிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு இந்த காற்றும் கடலும் கீழ்ப்படியுமா? என்பதை சிந்தித்துப்பாருங்கள். அவர் சொல்ல அப்படியே நடந்தது. இயேசுவின் நாட்களில் ஆண்டவருடைய அற்புதங்களை கண்ட மக்கள் ஆச்சரியப்பட்டனர். அநேகர் இயேசுவிடம் வந்து எந்த அதிகாரத்தினால் இவைகளைச் செய்கிறீர் என்று கேட்டார்கள். நானும் உங்களிடத்தில் சில கேள்விகளைக் கேட்கிறேன் யோவான் கொடுத்த ஸ்நானம் தேவனால் உண்டாயிற்றோ அல்லது மனுஷரால் உண்டாயிற்றோ என்றார். அவர்கள் பதில் சொல்ல தயங்கினார்கள் நானும் உங்களுக்கு சொல்லேன் என்றார். இத்தனை அற்புதங்களையும் கண்ட ஜனங்களில் பரிசேயர், சதுசேயர், வேதபாரகர் போன்றோர் அவருடைய உபதேசத்தில் குற்றம் கண்டுபிடிக்கும்படியாக முயற்சித்தனர். விசுவாசித்த



மகதலேனா மரியாளுக்கு முதல் முதல் தரிசனமானார்" (மாற்கு16:9). இவளோடுகூட மற்ற ஸ்திரீகளும் இயேசுவை வைத்த இடத்தைப் பார்க்க வந்தனர். இருந்தபோதிலும் இவளுக்கு மாத்திரமே இயேசு முதல் முதல் தரிசனமானார் என்ற நிகழ்வு இவளுக்குக் கிடைத்த ஒரு பெரிய பாக்கியமல்லவா! இதற்கு காரணம் என்ன? யோவான் சுவிசேஷத்தில் இவ்விதமாக வாசிக்கிறோம். "வாரத்தின் முதல்நாள் காலையில் அதிக இருட்டோடே மகதலேனா மரியாள் கல்லறையினிடத்திற்கு வந்து கல்லறையை அடைத்திருந்த கல் எடுத்துப்போடப்பட்டிருக்கக் கண்டாள்" உடனே அவள் ஓடி சீமோன் பேதுருவினிடத்திலும் இயேசுவுக்கு அன்பாயிருந்த மற்ற சீஷனிடத்திலும் போய்: கர்த்தரைக் கல்லறையிலிருந்து எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள், அவரை வைத்த இடம் எங்களுக்குத் தெரியவில்லை என்றாள்" (யோவா.20:1-2). இதைக் கேட்ட சீஷர்களும் ஓடிவந்து பார்த்துவிட்டு, பின்பு தங்களுடைய இடத்திற்குத் திரும்பிபோனார்கள். ஆனால் இந்த மரியாளோ திரும்பிப் போகவில்லை. கல்லறையினருகே வெளியே அழுதுகொண்டிருந்தாள்.

அப்பொழுது அங்கிருந்த இரண்டு தூதர்கள் அவளை நோக்கி, ஸ்திரீயே ஏன் அழுகிறாய் என்றார்கள். அதற்கு அவள்: என் ஆண்டவரை எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள் அவரை வைத்த இடம் எனக்குத் தெரியவில்லை என்றாள். இவைகளைச் சொல்லிப் பின்னாகத் திரும்பி, இயேசு நிற்கிறதைக் கண்டாள்; ஆனாலும் அவரை இயேசு என்று அறியாமல் அவரைத் தோட்டக்காரர் என்று எண்ணி: "ஐயா, நீர் அவரை எடுத்துக்கொண்டு போனதுண்டானால், அவரை வைத்த இடத்தை எனக்குச் சொல்லும் நான் போய் அவரை எடுத்துக்கொள்வேன் என்றாள்" (யோவா.20:10-15). இயேசுவின் சரீரத்தை யாரோ எடுத்துச் சென்றுவிட்டனர் என்று எண்ணின அவளுடைய இருதயம் என்னமாய் சஞ்சலப்பட்டிருக்கும்! மேலும் இயேசுவையே பார்த்து நீர் எடுத்துக்கொண்டு போனதுண்டானால், அவரை வைத்த இடத்தைச் சொல்லும் ஐயா, நான் போய் அவரை எடுத்துக் கொள்ளுகிறேன் என்று சொல்லுகிறாள். இந்த சம்பாஷணையைக் குறித்து சிந்திக்கும்போது அவள் இயேசுவினிடத்தில் கொண்டிருந்த அன்பு அளவிற்கு எட்டாதது என நினைக்கத்தோன்றுகிறது. உடன் வந்த அனைவருமே போய்விட்டனர், சீஷர்கள் கூட திரும்பிச் சென்றுவிட்டனர். இவளோ, கல்லறையை விட்டு அகன்று போகாமல் அழுதுகொண்டிருந்திருக்கிறாள்.

இயேசுவின் சரீரத்தைக் காணவில்லை, அதை எடுத்துச் சென்றவர்களிடமிருந்து எப்படியாவது அதைத் திரும்பப் பெற்றுவிட வேண்டுமென்றும் மிகுந்த பயத்தோடும், அழுகையுடனும் அந்த இடத்தை விட்டு அகலாது நின்றுகொண்டிருந்த அவளுடைய மாறாத அன்பு அவளை உயிர்த்தெழுந்த இயேசுவை முதல் முதலாகத் தரிசிக்கச் செய்தது என்றுதான் கூறவேண்டும். லாசருவின் சகோதரி மரியாள் தன்னைவிட்டு எடுபடாத நல்லபங்கை தெரிந்து கொண்டதுபோல, மகதலேனா மரியாளும் இயேசுவை விட்டு தன்னை விடுவித்துக்கொள்ளவில்லை. நாமும் இப்பேர்பட்ட அன்பு கொண்டுள்ளோமா? இயேசுவின் மேலுள்ள நமது அன்பு பூரணப்பட்டதாக இருக்கிறதா? நம்மை நாமே சோதித்துக் பார்ப்போம். இயேசுவே நமது ஆண்டவராக நம்மை ஆளுபவராக இருக்கட்டும்.

அன்பு சகோதரிகளே, மகதலேனா மரியாளின் அற்புத குணாதிசயங்கள் நமக்கு பல பாடங்களை புகட்டுவதாக இருக்கிறது. நம்மிடமிருந்த பாவப்பிசாசுகளின் பிடியிலிருந்து நம்மை விடுவித்து காத்த நம் இயேசுவை நாம் எப்படிப் பற்றிக் கொண்டிருக்கிறோம். இவளைப்போல் நம்முடைய வாழ்விலும் நம்மை மீட்ட இயேசுவுக்கே முதலிடம் தருவோம். கிறிஸ்துவுக்காகவே வாழ்ந்து இந்த கடைசிநாட்களில் மீண்டும் வரப்போகிற இயேசுவை சந்திக்க ஆயத்தமாவோம். கர்த்தரின் நற்செய்தியை வெட்கப்படாமல் அனைவருக்கும் அறிவிப்போம். கிறிஸ்துவை நம்வாழ்வில் பிரதிபலிப்போம். உயிர்த்தெழுந்த இயேசுவை இவள் தரிசித்தது போல நாமும் ஆயத்தத்துடனிருந்து மீண்டும் வரப்போகிற இயேசுவை தரிசிப்போம். கர்த்தர் தாமே நமக்கு உதவிசெய்வாராக! ஆமென்.

ஒளிந்து கொண்டனர் ஆனால் மகதலேனா மரியாளோ தூரத்திலிருந்து பார்த்துக் கொண்டிருந்தாள். யோவா.19:25 ல் "இயேசுவின் சிலுவையினருகே அவருடைய தாயும், அவருடைய தாயின் சகோதரி கிலெயோப்பா மரியாளும், மகதலேனா மரியாளும் நின்றுகொண்டிருந்தார்கள் என வாசிக்கிறோம்.

இது மட்டுமல்லாது, இயேசுவின் சரீரத்தை யோசேப்பு என்ற ஓர் அந்தரங்க சீஷன், அவரை சிலுவையிலிருந்து இறக்கி, மெல்லிய துப்பட்டியில் சுற்றி, கன் மலையில் வெட்டியிருந்த கல்லறையிலே அவரை வைத்து,கல்லறையில் வாசலில் ஒரு கல்லைப் புரட்டிவைத்தான். அவரை வைத்த இடத்தை மகதலேனா மரியாளும் யோசேயின் தாயாகிய மரியாளும் பார்த்தார்கள் என்று மாற்கு 15:45-47 வசனங்களில் வாசிக்கிறோம். இயேசுவைப் பின்சென்று அவருக்கு ஊழியஞ்செய்துவந்தவள் இப்போது இயேசுவைப் பிடித்துச் சென்றுவிட்டது ரோம அரசு, அவரும் சிலுவையில் மரித்துவிட்டார் எல்லாம் முடிந்துவிட்டது என்றிருக்கவில்லை. அவரை வைத்த இடம் வரை சென்று தூரத்திலிருந்து அந்த இடத்தைப் பார்த்தாள். பொதுவாக நம்முடைய கலாச்சாரத்தின்படி ஸ்திரீகள் கல்லறைவரைக்கும் செல்ல அனுமதிக்கப்படமாட்டார்கள். ஆனால் இவளோ இயேசுவை விட்டு நீங்காதிருந்தாள் எப்பேர்பட்ட அன்பு! அன்பு சகோதரிகளே, நாம் எப்படியிருக்கிறோம். இயேசுவை பின்பற்றி அவருடைய அடிச்சுவடுகளைப் பற்றிக்கொள்ளவும் அதன்படி நடக்கவும் விரும்புகிறோமா? இல்லை, அப்போஸ்தலர்களைப் போல நம்மை ஒளித்துக்கொண்டு நான் ஒரு கிறிஸ்தவள் என்று சொல்ல பயந்து நம்முடைய சமூகத்திற்கு முன்பு உலகத்திற்கு ஒத்த வேஷந்தரித்தவர்களாகக் காணப்படுகிறோமா? சிந்திப்போம். தேவன் நம் இருதயங்களை அறிந்திருக்கிறார். அவருக்கு மறைவானது ஒன்றுமில்லை.

அடுத்ததாக மகதலேனா மரியாளின் அன்பிற்கு ஆதாரமாக இன்னொரு காரியத்தையும் பார்ப்போம். இயேசு அடக்கம் செய்யப்பட்ட அன்றையதினம் பெரிய ஓய்வுநாளுக்கு முந்தின ஆயத்தநாள் (அடுத்த நாள் ஓய்வுநாள்). யூதர்களின் முறைமைப்படி ஓய்வுநாளிலே (சனிக்கிழமை ஆறாவது நாள்) எந்த ஒரு வேலையும் செய்யக்கூடாது. எனவே மகதலேனா மரியாளும் மற்ற ஸ்திரீகளும் சரீரம் வைக்கப்பட்ட விதத்தையும் பார்த்து, திரும்பிப்போய், கந்தவர்க்கங்களையும் பரிமள தைலங்களையும் ஆயத்தம் பண்ணி, கற்பனையின்படியே ஓய்வுநாளில் ஓய்ந்திருந்தார்கள் (லூக்.23:55,57). அப்படியானால் வாரத்தின் முதல் நாளில் கர்த்தரை வைத்த இடத்திற்குச் செல்ல ஓய்வுநாளுக்கு முந்தைய நாளிலேயே சுகந்தவர்க்கங்களையும் பரிமளதைலத்தையும் ஆயத்தம் செய்துவிட்டனர். கர்த்தர்மேல் கொண்ட அன்பு அவர்களை அவ்விதமாக ஆயத்தப்படுத்தியிருக்கிறது. இன்றைய கிறிஸ்தவ ஸ்திரீகளாகிய நாம் வாரத்தின் முதல் நாளில் கர்த்தருடைய மரணத்தை நினைவுகூரும்படி எத்தகைய ஆயத்தமுள்ளவர்களாயிருக்கிறோம்? சிந்திப்போம்.

மேலும் அவளும் மற்ற ஸ்திரீகளும் ஆயத்தம் பண்ணின சுகந்த வர்க்கத்துடன் (மாற்.16:1, லூக்.24:1) வாரத்தின் முதல் நாளில் அதிக இருட்டோடே, (யோவா.20:1) அதிகாலையில் (மாற்.16:1) சூரியன் உதயமாகியபோது (மாற்.16:2) விடிந்து வருகையில் (மத்.28:1) கல்லறையைப் பார்க்க வந்தார்கள். கன்மலையில் வெட்டப்பட்ட கல்லறைக்கு பெண்கள் இருட்டோடே செல்லுவார்களா? இல்லை பயப்படுவர்கள். ஆனால் இந்த ஸ்திரீகளோ பயப்படவில்லை காரணம் அவர்கள் இயேசுவின் மேல் கொண்ட அன்பு. அன்பிலே பயமில்லை. கிறிஸ்தவ ஸ்திரீகளாகிய நாம் எந்த அளவு இயேசுவினிடத்தில் அன்புகூருகிறோம்? வாரத்தின் முதல் நாளில் சபை கூடிவருதலில் எவ்வாறு பங்குகொள்ளுகிறோம்? சபையின் நேரத்திற்காவது வந்து சேருகிறோமா? உங்களுடைய ஆயத்தம் எப்படிப்பட்டதாயிருக்கிறது என்று சற்றே சிந்தியுங்கள். ஆவியானவரைத் துக்கப்படுத்தாதீர்கள்.

கடைசியாக, இந்த மகதலேனா மரியாளுக்கு யாருக்கும் கிடைக்காத ஒரு பாக்கியம் கிடைத்தது. "வாரத்தின் முதலாம் நாள் அதிகாலையிலே இயேசு எழுந்திருந்தபின்பு



ஜனங்களில் அநேகர் இந்த அதிகாரத்தை கொடுத்த தேவனுக்கு நன்றி செலுத்தினர். ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவிற்கு கொடுக்கப்பட்ட அதிகாரத்தைக்குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

அவருக்கு வல்லமைகளும் கீழ்ப்பட்டிருக்கிறது. ஒரு முறை யவீரு வீட்டிற்கு போகையில் "பன்னிரெண்டு வருஷமாய்ப் பெரும்பாடுள்ளவளாயிருந்து தன் ஆஸ்திகளையெல்லாம் வைத்தியர்களுக்குச் செலவழித்தும் ஒருவனாலும் சொஸ்தமாக்கப்படாதிருந்த ஒரு ஸ்திரீ அவருக்குப் பின்னாக வந்து அவருடைய வஸ்திரத்தின் ஓரத்தைத் தொட்டாள்; உடனே அவளுடைய பெரும்பாடு நின்றுபோயிற்று. அப்பொழுது இயேசு; என்னைத் தொட்டது யார் என்று கேட்டார். எங்களுக்குத் தெரியாதென்று எல்லாரும் சொன்னபோது; பேதுருவும் அவனுடனே கூட இருந்தவர்களும் ஐயரே, திரளான ஜனங்கள் உம்மைச் சூழ்ந்து நெருக்கிக் கொண்டிருக்கிறார்களே என்னைத் தொட்டது யார் என்று எப்படிக் கேட்கிறீர் என்றார்கள். அதற்கு இயேசு என்னிலிருந்து வல்லமை புறப்பட்டதை அறிந்திருக்கிறேன்; ஆதலால் ஒருவர் என்னைத் தொட்டதுண்டு என்றார்" (லூக்.8:43-46). ஒருவராலும் சுகமாக்கக் கூடாதிருந்த பெரும்பாடுள்ள ஸ்திரீயை இயேசுவின் வல்லமையுள்ள வஸ்திரம் சுகமாக்கியது.

மரியாள் ஒரு முறை எலிசபெத்வீட்டிற்கு சென்றிருந்தபோது; "என் ஆண்டவருடைய தாயார் என்னிடத்தில் வந்தது எனக்கு எதினால் கிடைத்தது. இதோ, நீ வாழ்த்தின சத்தம் என் காதில் விழுந்தவுடனே, என் வயிற்றிலுள்ள பிள்ளை களிப்பாய்த் துள்ளிற்று. விசுவாசித்தவளே பாக்கியவதி, கர்த்தராலே அவளுக்குச் சொல்லப்பட்டவைகள் நிறைவேறும் என்றாள். அப்பொழுது மரியாள்; என் ஆத்துமா கர்த்தரை மகிமைப்படுத்துகிறது. என் ஆவி என் இரட்சகராகிய தேவனில் களிகூருகிறது. அவர் தம்முடைய அடிமையின் தாழ்மையை நோக்கிப்பார்த்தார்; இதோ, இது முதல் எல்லாச் சந்ததிகளும் என்னைப் பாக்கியவதி என்பார்கள். வல்லமையுடையவர் மகிமையானவைகளை எனக்குச் செய்தார்; அவருடைய நாமம் பரிசுத்தமுள்ளது" என்றாள் (லூக்.1:43-49). இந்த மரியாள் கர்த்தராகிய இயேசுவானவரை சுமந்து பெற்றெடுக்கும் பாக்கியத்தை பெற்றவள். இவள் உலகத்தில் உள்ள அனைத்து பெண்களிலும் தானே ஒரு சிறந்த பெண் என்று தன்னைச் சொல்லிக்கொள்ளவில்லை. வல்லமையுடையவர் மகிமையானவைகளை எனக்குச் செய்தார் என்றாள். ஆம், இல்லாதவைகளை இருக்கிறவைகளைப்போல அழைக்கிற கர்த்தர் வல்லமையுடையவர். எனவே இக்காரியத்தை செய்தார்.

எலிசபெத்தைக்குறித்து தேவதூதன் சொல்லும்போது; உனக்கு இனத்தாளாயிருக்கிற எலிசபெத்தும் தன் முதிர்வயதிலே ஒரு புத்திரனைக் கர்ப்பந்தரித்திருக்கிறாள்; மலடியென்னப்பட்ட அவளுக்கு இது ஆறாம் மாதம். தேவனாலே கூடாதகாரியம் ஒன்றுமில்லை என்றான். ஆம் அன்பானவர்களே, தேவனாலே கூடாதகாரியம் ஒன்றுமில்லை. "அவர் நம்முடைய பிதாவாகிய ஆபிரகாமுக்கு இட்ட ஆணையை நிறைவேற்றுவதற்கும்; ஆதிமுதற்கொண்டிருந்த தம்முடைய பரிசுத்த தீர்க்கதரிசிகளின் வாக்கினால் தாம் சொன்னபடியே, தமது ஜனத்தைச் சந்தித்து மீட்டுக்கொண்டு, நம்முடைய சத்துருக்களினின்றும், நம்மைப் பகைக்கிற யாவருடைய கைகளினின்றும், நம்மை இரட்சிக்கும்படிக்கு, தம்முடைய தாசனாகிய தாவீதின் வம்சத்திலே நமக்கு இரட்சணியக் கொம்பை ஏற்படுத்தினார். நீயோ பாலகனே, உன்னதமானவருடைய தீர்க்கதரிசி என்னப்படுவாய்; நீ கர்த்தருக்கு வழிகளை ஆயத்தம்பண்ணவும், நமது தேவனுடைய உருக்கமான

இரக்கத்தினாலே அவருடைய ஜனத்துக்குப் பாவமன்னிப்பாகிய இரட்சிப்பைத் தெரியப்படுத்தவும், அவருக்கு முன்னாக நடந்துபோவாய். அந்தகாரத்திலும் மரண இருளிலும் உட்கார்ந்திருக்கிறவர்களுக்கு வெளிச்சம் தரவும், நம்முடைய கால்களைச் சமாதானத்தின் வழியிலே நடத்தவும், அவ்விரக்கத்தினாலே உன்னதத்திலிருந்து தோன்றிய அருணோதயம் நம்மைச் சந்தித்திருக்கிறது என்றான். அந்தப் பிள்ளைவளர்ந்து, ஆவியிலே பலங்கொண்டு, இஸ்ரவேலுக்குத் தன்னைக் காண்பிக்கும் நாள்வரைக்கும் வனாந்தரங்களிலே இருந்தான்" (லூக்.1:72-80). வல்லமையுள்ள தேவன் இயேசுவுக்கு முன்னோடியாக யோவான்ஸ்நானனை தெரிந்துகொண்டார். வெட்டுக்கிளியும் காட்டுத்தேனையும் புசித்துக்கொண்டு மனந்திரும்புங்கள் பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று வனாந்தரத்திலே கூப்பிடுகிறவனுடைய சத்தமாயிருந்தான்.

ஆண்டவர் இயேசுவுக்கு வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறதை நாம் இச்செய்தியின் மூலமாக தியானித்தோம். இந்த அதிகாரமுடையவருக்கு நீங்கள் கீழ்ப்படிந்து அவருடைய வல்லமையுள்ள வசனத்திற்கு உங்களை ஒப்புக்கொடுங்கள். தேவதூதர்களும் அதிகாரங்களும் வல்லமைகளும் அவருக்குக் கீழ்ப்பட்டிருக்கும்போது நீங்களும் உங்களுடைய குடும்பமும் அவருக்குக் கீழ்ப்பட்டிருக்கவேண்டியது எத்தனை அவசியமான காரியம். அவருக்குக் கீழ்ப்படிவோரை கர்த்தர் ஆசீர்வதித்து அவருடைய சித்தத்தை அவர்கள் மூலம் நிறைவேற்றிவருகிறார். அப்படியாக முதல் நூற்றாண்டில் அநேகர் பிற மார்க்கத்தைச் சேர்ந்தவர்கள் இதில் இணைக்கப்பட்டனர். உலக அதிகாரங்கள் ஒரு காரியத்தை பிரகடனப்படுத்தும்போது அதை நாம் ஏற்றுக்கொண்டு கீழ்ப்படிவதைப்போல அண்டசராசரங்களையும் ஆண்டு, போஷிக்கும் கர்த்தருக்கும் அவருடைய வல்லமையுள்ள வசனங்களுக்கும் உங்களை ஒப்புக்கொடுங்கள்.

**கர்த்தராகிய இயேசுவைப் பின்பற்றுகிறவர்களுக்கு அவர் பிதாவினிடம் அதிகாரம் பெற்றதைப்போல அவர்களுக்கும் அதிகாரம் கொடுப்பாரா?**

ஆம், அவர் பெற்றுத்தருவதாக சொல்லியிருக்கிறார். யாருக்கென்றால்; "ஜெயங்கொண்டு முடிவுபரியந்தம் என் கிரியைகளைக் கைக்கொள்ளுகிற வனெவனோ அவனுக்கு, நான் என் பிதாவினிடத்தில் அதிகாரம் பெற்றதுபோல, ஜாதிகளின்மேல் அதிகாரம் கொடுப்பேன்" (வெளி.2:26). ஆண்டவருடைய கிரியைகளை பரிசுத்த வேதாகமத்தில் பார்க்கிறோம். அவர் எங்கும் நன்மைசெய்கிறவராய் சுற்றித்திரிந்தார்.

நாமும் அதைபோல நன்மைசெய்கிறதிலே சோர்ந்துபோகாமல் நன்மைசெய்யும்போது அவருடைய கிரியைகளைக் கைக்கொள்ளுகிறவர்களாய் இருப்போம். ஒருவரும் கிரியை செய்யக்கூடாத இராக்காலம் வருகிறது. ஆகையால் நமக்கு கிடைக்கும் சமயத்திற்குத் தக்கதாய் தானதர்மம் செய்ய மறவாதிருப்போம். முதல் நூற்றாண்டில் வாழ்ந்த யோவன்னாள், சூசன்னாள், மார்த்தாள், மரியாள், தொற்காள் என்று சொல்லப்படும் தபித்தாள் போன்றோர் அநேக நன்மைகளை கர்த்தராகிய இயேசுவின் நிமித்தமாக செய்து நற்சாட்சி பெற்றார்கள். அதைப்போல நீங்களும் செய்வீர்களானால் இயேசுவானவர் பிதாவினிடம் அதிகாரத்தை பெற்றதைப்போல நமக்கும் அதிகாரத்தைக் கொடுப்பார். இன்றே உங்களை சகல அதிகாரம் படைத்த ஆண்டவருக்கு ஒப்புக்கொடுங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.



பெண்கள் பகுதி

# மகதலேனா மரியாள்
# Mary Magdalene

-Glory Arjunan



மரியாள் என்பதற்கு 'கண்ணீர்' என்று அர்த்தமாம். எபிரெய பாஷையில் (பழைய ஏற்பாட்டு காலத்தில்) மிரியாம் என்பதும் கிரேக்க பாஷையில் (புதிய ஏற்பாட்டு காலத்தில்) மரியாள் என்பதும் ஒன்றுதான் என்று கூறப்படுகிறது.

புதிய ஏற்பாட்டு புத்தகத்தில் மரியாள் என்ற பெயரைத் தரித்திருந்த பல மரியாள்களை பார்க்கமுடிகிறது. அவர்களில்

1. கன்னிமரியாள் - இயேசுவின் தாய்
2. பெத்தானியா மரியாள் - லாசருவின் சகோதரி
3. மகதலேனா மரியாள் - உயிர்த்தெழுந்த இயேசுவை முதல் முதலில் தரிசித்தவள்.
4. கிலெயோப்பா மரியாள் - யாக்கோபு மற்றும் யோசேப்பின் தாய்
5. மாற்கு என்னும் பேர்கொண்ட யோவானின் தாய் மரியாள்.

இவர்கள் அனைவரையும் பல காரியங்களில் விசேஷித்தவர்களாகக் காணமுடிகிறது. புதிய ஏற்பாட்டில் இந்த மரியாள்களைப் பற்றி வாசிக்கும்போது நம்முடைய ஆவிக்குரிய வாழ்வுக்கென்று அநேகக் காரியங்களைக் கற்றுக் கொள்ள முடியும். அவ்வகையில் மகதலேனா மரியாளைப் பற்றி வாசிக்கும் போது என்ன கற்றுக்கொள்ளலாம் என தியானிப்போம்.

இவளைப் பற்றி லூக்கா 8:2, "...ஏழு பிசாசுகள் நீங்கின மகதலேனாள் என்னப்பட்ட மரியாள்" என்று அடையாளப்படுத்துகிறது. அப்படியானால், இவள் ஏழு பிசாசுகளின் பிடியில் மிகுதியாய் அவதிப்பட்டிருந்திருப்பாள். இயேசு கிறிஸ்துவின் வல்லமையினால் அவளைப் பிடித்திருந்த ஏழு பிசாசுகளும் நீங்கின பிசாசுகளின் பிடியிலிருந்து நீங்கி சுகமடைந்த இவள், சுகத்தைப் பெற்றுவிட்டோமே, இனி சமுதாயத்திலும், உற்றார் உறவினர் மத்தியிலும் சுகமாய் வாழுவோம் என்று சென்றுவிடவில்லை. இயேசு கிறிஸ்துவுக்கு ஊழியஞ்செய்ய ஆரம்பித்தாள். இயேசு பட்டணங்கள் தோறும் கிராமங்கள் தோறும் பிரயாணம்பண்ணி தேவனுடைய ராஜ்யத்திற்குரிய நற்செய்தியைக் கூறிப் பிரசங்கித்து வந்தபோது அவருடனே இருந்த மற்ற ஸ்திரீகளோடுகூட அவருக்கு ஊழியஞ்செய்து வந்தாள். தான் பெற்ற சுகத்திற்காக முடிவுபரியந்தம் நன்றியுள்ளவளாக வாழ்ந்தாள். இந்நாட்களில் வாழ்ந்து வருகின்ற நாமும்கூட இயேசுகிறிஸ்துவின் கிருபையினாலும் இரக்கத்தினாலும் அநேக நன்மைகளைப் பெற்றிருக்கிறோம். எல்லாவற்றிற்கும் மேலாக பாவங்களாகிய பிசாசுகளின் பிடியிலிருந்து அவருடைய இரத்தத்தினால் நீங்கினவர்களாகவும் கழுவப்பட்டவர் களாகவுமிருக்கிறோம். நம்முடைய வாழ்க்கையில் எவ்வித சோதனையும், வேதனையும் இல்லாமல் சகலமும் சுமூகமாய் இருக்கின்ற போது கர்த்தருக்காய் அதைச் செய்வேன் இதைச் செய்வேன் என்று உற்சாகமாய் காணப்படுவோம். ஆனால் ஏதேனும் கஷ்டங்கள், வியாதிகள், சோதனைகள் வந்துவிட்டால் போதும், அவ்வளவுதான் இயேசுவாவது, சபையாவது, ஜெபமாவது என்று சொல்லி நன்றியறியாதவர்களாக மாறிவிடுகிறோம். யோபு தன் மனைவியைப் பார்த்து, "...நீ பயித்தியக்காரி பேசுகிறதுபோலப் பேசுகிறாய்; தேவன் கையில் நன்மையைப் பெற்ற நாம் தீமையையும் பெறவேண்டாமோ என்றான்" ...(யோபு.2:10). அன்பு சகோதரிகளே, சிந்திப்போம். மகதலேனா மரியாளைப்போல நன்றியுள்ளவர்களாக அவருக்கு ஊழியஞ்செய்வோம்.

மேலும் அவள் இயேசுவின் சிலுவை மரணம் வரைக்கும் சென்றாள். சீஷர்கள் எல்லாரும் தங்களுக்கும் இதுபோன்ற மரண ஆக்கினை வந்துவிடுமோ என்று பயந்து ஓடி

19. அவர் நமக்குப் போதிக்கிறார் (1கொரி.2:13)
20. அவர் நம்மைக் கூர்ந்து கவனிக்கிறார் (1கொரி.2:14)
21. அவருக்குள் நாம் ஜெபிக்கிறோம் (யூதா 1:19,20).
22. அவர் ஜீவன் அளிக்கிறார் (யோவா.6:63).
23. அவர் விடுதலை அளிக்கிறார் (2கொரி.3:17).
24. நாம் கண்ணாடியில் காண்கிறது போல கிறிஸ்துவின் சாயலாக நம்மை மறுரூபப்படுத்துகிறார் (2கொரி.3:18).
25. அவர் மூலமாக நாம் ஜீவனை அறுவடைசெய்கிறோம் (கலா.6:8).
26. அவர் மூலமாக நாம் பிதாவினிடத்தில் சேரும் சிலாக்கியத்தைப் பெறுகிறோம் (எபே.2:18).
27. பரிசுத்த ஆவியின் பலத்தினாலே நாம் நம்பிக்கையில் பெருகுகிறோம் (ரோம.15:13).
28. பரிசுத்த ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாக மாறுகிறோம் (எபே.2:22).
29. அவரும் சபையும் "வா" என்கிறார்கள் (வெளி.22:17).

30. பரிசுத்த ஆவியானவர் நமது இரட்சகர்வர நாம் இணைந்து காத்திருக்கிற சபையாகிய நம்முடன் கூட நிலைத்திருக்கிற பிரசன்னமாக இவ்வுலகில் இருக்கிறார்.

## பார்வையினால் அல்ல
## Not By Sight

நான் வழியை அறியவில்லை, அன்பின் கர்த்தாவே,
நீர் என்னை அழைத்துச் சென்றிருப்பீரென;
இரவில் ஒரு விளக்கும் பிரகாசித்துக்கொண்டிருக்கவில்லை
பாதை காட்டும் அடையாளக்குறியும் இல்லை.

வார்த்தைகளுக்காய் கதறுகிறான் மாம்சமானவன்
தள்ளாடும் பாதங்களை வழிநடத்த;
அவன் அஞ்சுகிறான் ஆழத்தின் அபாயங்களுக்கு,
கவலை, கண்ணீர், தோல்வி.

நடுங்கியகுரலில் உள்ளான மனிதன்
தொடர்ந்து வேண்டுகிறான்
கேட்கப்படும்படி; அவன் வாக்குத்தத்தை அறிகிறான்
நீர் மனிதனுக்காக உண்டாக்கியதை,
அது உம்முடைய வார்த்தையின் வாக்குத்தத்தமே.

அவன் முயற்சிக்கிறான் - ஓ கர்த்தாவே, அவன் முயற்சிக்கிறான்
விசுவாசத்தில் நடக்க எனக்குதவும்படி,
நடக்க வேண்டிய வழியைக் கண்டிப்பாக நான் கற்றுக்கொள்ள எனக்குச் சொல்லும்படி
நான் வழியை அறியாதிருக்கிற போதும்.

மேலும் உள்ளான மனிதனை சூழ்ந்துகொள்ள,
உம்முடைய கண்களையே நோக்கியிருந்து கற்றுக்கொள்ள எனக்குதவ,
உம்முடைய வழி நடத்தும் கரத்திற்குக் காத்திருக்க.
உமது அதிகமான பலத்தைக் கேட்கிறேன் கர்த்தாவே நான்

நான் வெளிச்சத்தைக் காண்பேன், நான் வழியை அறிந்து கொள்வேன்
ஒவ்வொரு அடிச்சுவடும் வெளிப்பட்டிருக்கையில்;
தயைசெய்து கீழ்ப்படிதலைக் கற்றுக்கொள்ள எனக்குதவும் கர்த்தாவே,
தயைசெய்து தள்ளாடும் என் ஆத்துமாவை வழிநடத்தும்.

*- Betty*





# வஞ்சிக்கப்படாதிருங்கள்
# Be Not Deceived

-J.C.Choate

கர்த்தருடைய வார்த்தை நாம் வஞ்சிக்கப்படாதிருக்கும்படி மீண்டும் மீண்டும் எச்சரிக்கிறது. வஞ்சிக்கப்படுதல் என்பது ஒருவன் தவறாக வழிநடத்தப்பட்டிருப்பதும், பொய் சொல்லும்படிக்கு போதிக்கப்பட்டிருப்பதும் அத்தோடுகூட அவன் பொய்யான கோட்பாட்டினை ஏற்றுக்கொண்டிருப்பதும் ஆகும். ஆனபடியால் வாசிப்பதற்கும் கற்றுக்கொள்வதற்கும் நாம் வேதவாக்கியங்களைக் கொண்டிருக்க வேண்டும், ஒரு மனுஷன் எளிதாக வஞ்சிக்கப்பட முடியாது என்று நீங்கள் நினைப்பீர்கள். ஆனால் அவன் வஞ்சிக்கப்பட முடியும்.

"இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: ஒருவனும் உங்களை வஞ்சியாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; ஏனெனில், அநேகர் வந்து, என் நாமத்தைத் தரித்துக்கொண்டு; நானே கிறிஸ்து என்று சொல்லி, அநேகரை வஞ்சிப்பார்கள்" (மத்.24:4,5) என்று சொன்னார். கொஞ்சம் கற்பனை செய்து பாருங்கள் இன்று கிறிஸ்து அல்லது மேசியா என்று உரிமைபாராட்டிக் கொண்டிருக்கின்ற வஞ்சகர்களால் மக்கள் வஞ்சிக்கப்பட்டிருக்கிறார்கள்! அறிவுள்ள ஜனங்கள் இப்பேர்பட்ட பொய்யினால் விழுந்து போவார்கள் என்று யார் நினைப்பார்கள், ஆனால் இப்படியாக விழுந்துபோகிறவர்கள் பலர் உண்டு.

பவுல், "அநியாயக்காரர் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று அறியீர்களா? வஞ்சிக்கப்படாதிருங்கள்; வேசிமார்க்கத்தாரும், விக்கிரகாராதனைக்காரரும், விபசாரக்காரரும், சுயபுணர்ச்சிக்காரரும், ஆண்புணர்ச்சிக்காரரும், திருடரும், பொருளாசைக்காரரும், வெறியரும், உதாசினரும், கொள்ளைக்காரரும் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை" (1கொரி.6:9,10) என எச்சரித்தார். மீண்டும், அவர் "மோசம்போகாதிருங்கள்; ஆகாத சம்பாஷணைகள் நல்லொழுக்கங்களைக் கெடுக்கும்" என்று சொன்னார் (1கொரி.15:33).

கலாத்தியருக்கு எழுதுகின்றபொழுது, பவுல், "மோசம்போகாதிருங்கள், தேவன் தம்மைப் பரியாசம்பண்ணவொட்டார்; மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான். தன் மாம்சத்திற்கென்று விதைக்கிறவன் மாம்சத்தினால் அழிவை அறுப்பான்; ஆவிக்கென்று விதைக்கிறவன் ஆவியினாலே நித்தியஜீவனை அறுப்பான்" (கலா.6:7,8) என்று சொன்னார்.

எபேசியர்கள் எச்சரிக்கப்பட்டனர், "நாம் இனிக் குழந்தைகளாயிராமல், மனுஷருடைய சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுள்ள போதகமாகிய பலவித காற்றினாலே அலைகளைப் போல அடிபட்டு அலைகிறவர்களாயிராமல், (எபே.4:14). "இப்படிப்பட்டவைகளினிமித்தமாகக் கீழ்ப்படியாமையின்

பிள்ளைகள்மேல் தேவகோபாக்கினை வருவதால், ஒருவனும் உங்களை வீண்வார்த்தைகளினாலே மோசம்போக்காதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்" (எபே.5:6).

பவுல் தெசலோனிக்கேயரை நினைப்பூட்டினார் "எவ்விதத்தினாலும் ஒருவனும் உங்களை மோசம்போக்காதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; ஏனெனில் விசுவாசதுரோகம் முந்தி நேரிட்டு, கேட்டின் மகனாகிய பாவமனுஷன் வெளிப் பட்டாலொழிய, அந்த நாள் வராது" (2தெச.2:3). அவர் தீமோத்தேயுக்கு; "பொல்லாதவர்களும் எத்தர்களுமானவர்கள் மோசம்போகிறவர்களாகவுமிருந்து மேன்மேலும் கேடுள்ளவர்களாவார்கள்" (2தீமோ.3:13) என்று எழுதினார்.

யாக்கோபு, "அல்லாமலும், நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்குத் திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல, அதின்படி செய்கிறவர்களாயும் இருங்கள்" (யாக்.1:22) என்று எழுதினார். அதன்பின்பு யோவான் எழுத ஏவப்பட்டு, "நமக்குள் பாவமில்லையென்போமானால், நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம், சத்தியம் நமக்குள் இராது" (1யோவா.1:8) என்று எழுதினார்.

வேதாகமத்தின் இப்பகுதிகளிலிருந்தும் கொடுக்க முடிந்த மற்றவற்றிலிருந்தும், நாம் வஞ்சிக்கப்படுவதற்கும் தவறாக நடத்தப்படுவதற்கும் மேலும் ஒரு நபர் வஞ்சகத்தினால் நித்திய இழப்பை முடிவாக அடைவதற்கும் சாத்தியகூருகள் உண்டு என கற்றுக்கொள்கிறோம்.

✧ **ஒருவன் தன்னைத் தானே வஞ்சித்துக்கொள்ளமுடியும்.** அவனால் ஏதாவது செய்யமுடியும் அல்லது சிலவற்றை நம்புவதற்கு அதிகமாக காரியங்களைத் திரட்டிக்கொண்டு இது சரியாக இருந்தாலும் அல்லது இல்லாவிட்டாலும் இது சரியென அவன் தானாகவே விவாதித்து நம்புகிறான். பல நூற்றாண்டுகளுக்கு முன்பாக தீர்க்கதரிசி ஒபதியா என்பவர் வசனம் 3-ல் "உங்கள் இருதயத்தில் வஞ்சிக்கப்படாதிருங்கள்" என்று எழுதியுள்ளார்.

✧ **ஒருவன் மற்றவர்களால் தன்னைத்தானே வஞ்சித்துக்கொண்டிருக்க முடியும்,** பவுல் ரோமர் 16:17,18-ல் எச்சரித்தபடி, "...நீங்கள் கற்றுக் கொண்ட உபதேசத்திற்கு விரோதமாய்ப் பிரிவினைகளையும் இடறல்களையும் உண்டாக்குகிறவர்களைக்குறித்து எச்சரிக்கையாயிருந்து, அவர்களை விட்டு விலக வேண்டு மென்று உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன். அப்படிப்பட்டவர்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு ஊழியஞ் செய்யாமல் தங்கள் வயிற்றுக்கே ஊழியஞ்செய்து, நயவசனிப்பினாலும் இச்சகப்பேச்சினாலும், கபடில்லாதவர்களுடைய இருதயங்களை வஞ்சிக்கிறவர்களாயிருக்கிறார்கள்". கவனித்துக் கேட்பவன் ஒரு பிரசங்கியாரிடத்தில் அல்லது போதகரிடத்தில் மிகுந்த நம்பிக்கையுடையவனாய், வேதாகமம் கூறுவதற்கு எதிரிடையாகயிருந்த போதிலும் கூட தான் சத்தியத்தினால் போதிக்கப்பட்டிருக்கிறேன் என தன்னில் தானே திருப்தியடைந்து கொள்கிறான்.

✧ **ஒருவன் புகழ்மிக்க தவறான கோட்பாட்டினால் வஞ்சிக்கப்படக்கூடும்.** பல ஆண்டுகளுக்கு முன்பாகவே பிழைகள் நடந்துவருகிறது, அது மிக பரந்து



பிறந்த சபைகளின் பெருக்கத்திற்கும் வளர்ச்சிக்கும் தேவையானவற்றை செய்யக்கூடிய எல்லா வல்லமையையும் அவர்களுக்குக் கொடுக்கும்படி அப்போஸ்தலர்களைப் பெலப்படுத்தினார். அப்போஸ்தலர் 8-ன் படி அப்போஸ்தலர்கள் ஒருவன் மேல் தங்கள் கைகளை வைத்ததினால் அவனால் அற்புதங்களைச் செய்ய முடிந்தது, ஆனால் அவன் அற்புதம் செய்யும் வல்லமையை மற்றவர்களுககுக் கொடுக்க முடியவில்லை. இதன் பொருள் அப்போஸ்தலர்கள் யாருக்கு அற்புதம் செய்யும் வல்லமையைக் கொடுத்தார்களோ அந்த வல்லமை அப்போஸ்தலர்கள் மரித்தபோது மரித்துவிட்டது, அந்த "அற்புத அடையாளங்களின் காலம்" அத்தோடு முடிந்தது. அப்போஸ்தலர்களால் செய்யப்பட்ட அடையாளங்கள் அவர்கள் கூறிய பிரசங்கம் போன்றவற்றை உறுதிப்படுத்துவதற்காக இது நடைபெற்றது, எனவே புதியஏற்பாடு முற்றுப்பெற்ற பின் (யோவானின் வெளிப்படுத்தல்) அற்புத அடையாளங்களினால் வசனத்தை உறுதிப்படுத்த இனி ஒரு போதும் அவசியமில்லாததாக இருந்தது (மாற்.16:20).

XI. இதன் அர்த்தம் பரிசுத்த ஆவியானவரின் கிரியை முடிந்து விட்டதா, கிறிஸ்தவர்கள் தங்களுடைய ஆவிக்குரிய வாழ்க்கையில் இப்போது தனித்து விடப்பட்டனரா? கிறிஸ்து நம்மை தனியே விடமாட்டேன் என்று வாக்களிக்கவில்லையா? அந்த வாக்குத்தத்தம் அப்போஸ்தலர்களுக்கு மட்டும் கொடுக்கப்பட்டதா?

நாம் தொடர்ந்து நடைபெற்றுவரும் கிரியைக் குறித்த சில வேதவாக்கியங்களைப் பார்ப்போம். நாம் இப்பகுதிகளை உண்மையாக எடுப்போமானால் பரிசுத்த ஆவியானவர் இக்கிரியைகளையெல்லாம் செய்கிறார் என்று சொல்லுவார்கள்.

1. ஆவியினால் ஞானஸ்நானத்தில் பிறந்திருக்கிறோம் (யோவா.3:3-5).
2. அவர் நமது துணையானவர் (யோவா.14:16-18).
3. அவர் நமது இரட்சிப்பின் முத்திரை (2கொரி.1:22).
4. அவர் நமது உத்திரவாதி (2கொரி.5:5).
5. அவரைத் துக்கப்படுத்த நமக்கு ஏதுவுண்டு (எபே.4:30).
6. அவரை அவித்துப்போட நமக்கு ஏதுவுண்டு (1தெச.5:19).
7. அவர் நம்மை வழிநடத்துகிறார் (கலா.5:18)
8. நாம் அவரில் வாழ்கிறோம் (2கொரி.3:6).
9. நாம் அவரில் நடக்கிறோம் (கலா.5:16).
10. அவர் மூலம் கனிகொடுக்கிறோம் (கலா.5:32).
11. அவர் மூலம் அவருடைய சரீரமாகிய சபைக்குள் பிரவேசிக்கிறோம் (1கொரி.12:13).
12. அவர் நம்மில் வாழ்கிறார் (2தீமோ.1:14; 1கொரி.3:16,17).
13. அவர் நம்மில் நிலைத்திருக்கிறார் (1யோவா.4:13).
14. அவர் நம்மைப் பெலப்படுத்துகிறார் (எபே.3:16-21).
15. அவர் மூலமாக நாம் சரீரத்தின் செய்கைகளை அழிக்கிறோம் (ரோம.8:13).
16. நாம் தேவனுடைய பிள்ளைகளென்று அவர் சாட்சி கொடுக்கிறார் (ரோம.8:16).
17. அவர் நமக்காக வேண்டுதல் செய்கிறார் (ரோம.8:27; எபே.2:18).
18. நாம் வேண்டிக்கொள்ள அறியாமலிருப்பதனால் பெருமூச்சுகளோடு வேண்டுதல் செய்கிறார் (ரோம.8:26).

பெண்கள் பகுதி



## ஏலோகிம் - Elohim *-Betty*

### பரிசுத்த ஆவியானவர்

ஆதி காலத்திற்கு முன்பிருந்தே, மனிதர் பாவஞ்செய்வார்கள் என்றும், அவர்கள் தங்களை தாங்களே சுத்திகரித்துக்கொள்ள எதுவும் செய்ய முடியாது என்றும், பாவம் நம்மை அவரிடமிருந்து நித்தியமாகவே பிரித்துவிடும் என்றும் தேவன் அறிந்தார். எனவே வெளிப்படுத்தின விசேஷம் 13:8ன் படி - கிறிஸ்து - உலகத்தோற்றமுதல் அடிக்கப்பட்ட - ஆட்டுக்குட்டியாக இருந்தார்! இந்த திட்டம் உருவாக்கப்பட்டது!

மேலும் தேவன், மனுஷர் தம்முடைய வழிகாட்டுதலும் வல்லமையுமில்லாமல் இவ்வுலகில் தனித்து விடப்பட்டு விழுந்து போவார்கள் என்பதையும் அறிவார் இயேசு தாம் காட்டிக் கொடுக்கப்பட்டு சிலுவையில் அறையப்படுவதற்கு முன்பே தம்முடைய சீஷர்களின் பயத்தை நீக்க இந்த வாக்குறுதியை அளித்தார்: "நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள். நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனே கூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார். உலகம் அந்தச் சத்திய ஆவியானவரைக் காணாமலும் அறியாமலும் இருக்கிறபடியால் அவரைப் பெற்றுக்கொள்ள மாட்டாது அவர் உங்களுடனே வாசம்பண்ணி உங்களுக்குள்ளே இருப்பதால் நீங்கள் அவரை அறிவீர்கள்" (யோவா.14:15-17) என்றார்.

IX. இயேசுவின் பரமேறுதலுக்குப் பின்பு, பெந்தெகொஸ்தே நாளில், பரிசுத்த ஆவியானவர் அப்போஸ்தலர்கள் மேல் ஊற்றப்பட்டார் (இது பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம்) சுவிசேஷ செய்தியினைப் பேசவும் எழுதவும் அவர்களைத் தகுதிப்படுத்தினார். உலகம் உண்டாக்கப்பட்டதற்கு முன்பிருந்தே இருந்த தேவனுடைய திட்டம் இவர்களுடைய பணியின் மூலம் அவருடைய குடும்பம் - சபை வளர்ச்சியில் நிறைவேற்றப்பட்டது.

X. அந்த ஆதி காலங்களில் சபை எதைப்போலிருந்தது? இது ஞானஸ்நானம் பண்ணப்பட்ட விசுவாசிகளையும் ஒருமித்தாக செயல்படுவதாகவும், வீடுகளில் குழுவாக இணைந்து ஆராதிக்கிறதாகவும், தங்களுடைய புதிய விசுவாசத்தில் புதிதாய் பிறந்தவர்களையும் கொண்டதாக இருந்தது. நாம் இப்போது பெற்றிருக்கிறதைப் போல் அவர்கள் புதிய ஏற்பாட்டினை பெற்றிருக்கவில்லை. காலப்போக்கில் எழுதும்படிக்கு பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு எழுதினவர்களால் **"நிருபங்கள்"** எழுதப்பட்டன, நிருபங்கள் கையேடுகளாக உருவாக்கப்பட்டு ஆங்காங்கே இருந்த சபைகளுக்கு அனுப்பப்பட்டது, அவர்களுடைய ஆவிக்குரிய வளர்ச்சியில் ஏவப்பட்ட திசைகளுக்குச் சென்று அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது.

அப்போஸ்தலர்கள் எல்லா இடங்களுக்கும் செல்ல முடியாதவர்களாய் இருந்தனர், எனவே தேவன் தெரிந்து கொண்ட கிறிஸ்தவர்கள் மேல் அப்போஸ்தலர்கள் தங்கள் கைகளை வைத்து அவர்களுக்கு விசேஷித்த அற்புதம் செய்யும் வரங்களான: சுகமாக்கும் வரம், தீர்க்கதரிசனவரம் வசனங்களைப் போதிக்கும் வரம், அவர்கள் கற்றிராத பல பாஷைகளைப் பேசும் வரம், புதிதாய்



விரிந்து கற்பிக்கப்பட்டுவருகிறது. மேலும் இது தேவனுடைய வார்த்தையைக் காட்டிலும் உண்மையுள்ளது போல் தோற்றமளித்து உண்மையாகவே தேவனுடைய வார்த்தைக்கு எதிரிடையாக நம்பப்படுகிறது. ரோமர் 16:18-ல் பவுலின் வார்த்தை இது குறித்து "...நயவசனிப்பினாலும் இச்சகப்பேச்சினாலும், கபடில்லாதவர்களுடைய இருதயங்களை வஞ்சிக்கிறவர்களாயிருக்கிறார்கள்" என தொடர்ந்து வழிநடத்துகிறார்.

✦ **ஒருவன் பெருந்திரளான மக்கள் கூட்டத்தைப் பின்பற்றுவதின் மூலம் வஞ்சிக்கப்படலாம்.** பெருந்திரளாக கூடிவரும் மக்களிடையே தவறுகள் இருக்க வாய்ப்பில்லை எனக் காரணப்படுத்துகிறான், ஆனால் மத்தேயு 7:13,14-ல் "...கேட்டுக்குப் போகிற வாசல் விரிவும், வழி விசாலமுமாயிருக்கிறது; அதின் வழியாய்ப் பிரவேசிக்கிறவர்கள் அநேகர்" என்று இயேசு சொன்னதை மறக்கிறான்.

இவைகளெல்லாம் வஞ்சிக்கப்பட்டுப் போவதற்கான பல வழிகளாக இருக்கின்றன. இது முன்னதாக திட்டமிடுகையில் தேவன்இரட்சிப்பினை - சபையை, ஏற்றுக்கொள்ளத்தக்க தொழுகையை, அவர் விரும்புகிறபடி நாம் வாழவேண்டிய வாழ்க்கை முறையை, கிறிஸ்துவின் மீண்டும் வரப்போகும் வருகையின் உறுதியை, அதைத் தொடரும் நியாயத்தீர்ப்பை, மேலும் நித்திய ஜீவனையே உருவாக்கியிருக்கிறார். பொதுவாக வேதவாக்கியங்களில் உருவாக்கப்பட்ட நிஜமான சத்தியங்கள் பிழையானதாக மறுக்கப்படுகையில் மனிதனால் - உருவாக்கப்பட்ட போதனைகள் பொதுவாக சத்தியத்தைப் போல ஏற்றுக் கொள்ளப்படுகிறது - சாதாரணமாக தேவனுடைய சத்தியங்களை அவர்கள் கேள்விப்பட்டிருப்பதைக் காட்டிலும் பல மனிதருடைய பொய்களை அதிகமாகக் கேள்விப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். நாங்கள் உங்கள் ஒவ்வொருவரையும் ஆன்மீக காரியத்தில் கர்த்தருடைய வார்த்தையை மட்டுமே பின்பற்றும்படி வேண்டிக்கொள்கிறோம்.

பல 'நல்ல' ஜனங்கள் தேவனுக்குக் கீழ்ப்படிய தேவன் தங்களுடைய வீழ்ச்சியை காணாதவர் போலிருக்கிறார் என்று தங்களுக்குத் தாங்களே சொல்லுவது உண்மையான ஒரு சோகமாகும், அவர்கள் வேதாகமம் என்ன சொல்லுகிறது என்ற அடிப்படை போதனைகளை அறியவில்லை. அவர்கள் தங்களையே வஞ்சித்துக் கொண்டிருக்கிறார்கள். தேவன் நம்முடைய அறிவீனத்தின் அடிப்படையில் நம்மை இரட்சிப்பதற்கு வாக்குபண்ணியிருக்கவில்லை, ஆனால் விசுவாசத்தின் அடிப்படையிலும் கீழ்படிதலின் அடிப்படையிலும் நம்மை இரட்சிக்க வாக்குப்பண்ணியிருக்கிறார்.




**சந்தா செலுத்திவிட்டீர்களா?**

The Word of Christ
Canara Bank A/c No.0946201000552
IFSC:CNRB0000946

India Post Payments Bank
ARJUNAN
048410018536
IPOS0000001

# தெரிந்து கொள்ளுவோம்

**- K.R.K.Ravi Asir**

- ❐ நமது இருமலின் வேகம் மணிக்கு 245 மைல்கள்.
- ❐ தேனீயால் தொடர்ச்சியாக 11 கி.மீ தூரம் பறக்க இயலும்.
- ❐ நைலான் துணியில் ரூபாய் நோட்டு அச்சடிக்கப்படும் நாடு ஜெர்மனி.
- ❐ ஒரு முறை இடி இடிக்கும்போது 110 டெசிபல் ஒலி ஏற்படுகிறது.
- ❐ பெண் வண்ணத்துப்பூச்சிகள் முட்டையிட்டவுடன் இறந்துவிடும்.
- ❐ உலகில் 80 இலட்சம் இரசாயனப் பொருட்கள் உள்ளன.
- ❐ விலங்கினங்களில் ஒட்டகச் சிவிங்கியின் வால்தான் மிகவும் நீளமானது.
- ❐ ஜாப்பானில் உள்ள புகழ் பெற்ற போன் சாய் மரத்தின் தாயகம் சீனா.
- ❐ ஸ்காலிட் என்ற கடல் சிப்பிக்கு 100 கண்கள் உண்டு.
- ❐ டால்பின்கள் 32 வகையான ஒலிகளை எழுப்புகின்றன.

## ஜெபியுங்கள்

- **நமது மாத இதழின் வாசகர்களுக்காக...**
- **பூமி கர்த்தரை அறிகிற அறிவில் வளர்ச்சியடைய...**
- **கர்த்தருடைய ஊழியத்தை செய்யும் அனைத்து ஊழியர்களுக்காக...**
- **உலகமெங்குமுள்ள கர்த்தருடைய சபைக்காக...**
- **ஒவ்வொரு நாளும் சத்தியம் பூமியில் விதைக்கப்பட...**
- **அனைத்துவிதமான நோயாளிகளுக்காக...**
- **தேவன் கொடுக்கும் அனைத்து ஆசீர்வாதங்களுக்காக...**



## பொது அறிவு சோதனை

1. அதிக எரிமலைகள் உள்ள நாடு எது?
   1. இந்தோனேஷியா 2. ஜப்பான் 3. வட அமெரிக்கா
2. மனிதனின் நுரையீரல் ஒரு நாளைக்கு எத்தனை முறை சுவாசத்தை உள்ளெடுத்து வெளியே செலுத்துகிறது?
   1. 23040 2. 2400 3. 300
3. முதன் முதலில் தமிழை ஆட்சிமொழியாக அறிவித்த வெளிநாடு எது?
   1. இலங்கை 2. பர்மா 3. சிங்கப்பூர்
4. நாடு முழுக்க மாணவர்களுக்கு ஒரே சீருடை உள்ள நாடு எது?
   1. கியூபா 2. மலேசியா 3. ஆஸ்திரேலியா
5. படகுகள் தயாரிக்க பயன்படும் மரம் எது?
   1. தேக்கு 2. பைன் 3. மருதமரம்

**விடைகள்:**
1. இந்தோனேஷியா
2. 23040
3. சிங்கப்பூர்
4. கியூபா
5. பைன்

'தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்' மாத இதழை ஒவ்வொரு மாதமும் 10ம் தேதியே Whatsapp மூலம் பெற்றுக்கொள்ள 6379350509 என்ற எண்ணோடு தொடர்பு கொள்ளுங்கள்



3. எபேசி.1:23 சொல்கிறது கிறிஸ்து --------------- மேலாக தலையாயிருக்கிறார் என்று.
4. எபி.12:2 சொல்கிறது கிறிஸ்து தேவனுடைய சிங்காசனத்தின் --------------- என்று.
5. நாமகரண சபைகள் பூமிக்குரிய மையங்களை உடையனவாய் இருக்கின்றனவா? ------------------
6. 2யோவா.9 சொல்கிறது கிறிஸ்துவின் உபதேசத்தில் ------------- மீறி நடக்கிற எவனும் --------------- உடையவனல்ல.
7. கலா.1:7 சொல்கிறது சிலர் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை ---- ---- என்று.
8. தேவனுடைய புஸ்தகத்தின் வசனங்களில் ------- -------------- தடை செய்கிறது.
9. தேவனுடைய புஸ்தகத்தின் வசனங்களிலிருந்து ----------- ---------- வெளி.22:19 தடைசெய்கிறது.
10. கிறிஸ்துவின் சரீரம் பூமியிலே ஏற்பாடு செய்யப்பட்டதாயிருக்கிறதா? --.

# ஆசிரியர் கடிதம்...

*அன்பான வாசகர்கள் அனைவருக்கும் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பரிசுத்தமான நாமத்தில் வாழ்த்துகள்.*

*தி வேர்ட் ஆப் கிரைஸ்ட் மாத இதழை நீங்கள் தொடர்ந்து பெற்று வேத சத்தியங்களை அறிந்துகொண்டு வருவது குறித்து மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். இந்த பூமியில் உங்களோடு நாங்கள் கர்த்தருடைய வார்த்தைகளை பகிர்ந்துகொள்வதில் சந்தோஷமடைகிறோம். நீங்கள் பெற்றுக்கொண்ட சத்தியத்தை மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ளுங்கள். கர்த்தருடைய சபை உங்கள் பகுதியில் இல்லையென்றால் எங்களோடு தொடர்பு கொள்ளுங்கள்.*

*"நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து, நான் உங்களுக்கு கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார்" (மத்.28:19,20). இவ்வசனத்தின்படி நாங்கள் பல இடங்களுக்குச் சென்று ஊழியத்தை செய்து வருகிறோம்.*

*இவ்விதழை மற்றவர்களுக்கும் கொடுத்து சத்தியம் பரவிட உதவுங்கள். நூறு முகவரிகள் சேகரித்துக்கொடுக்கிறவர்களுக்கு முழுவேதாகமம் கொடுக்கப்படும். எங்களிடம் ஆவிக்குரிய புத்தகங்கள் கைபிரதிகள் மற்றும் பாடல் புத்தகங்கள் இருக்கிறது. தேவைப்படுவோர் எங்களோடு தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளுங்கள்.*

*வாசகர்களாகிய உங்கள் யாவருக்காக தொடர்ந்து ஜெபிக்கிறோம். தேவனுடைய கிருபை உங்களனைவரோடுங்கூட இன்றும் என்றும் சதாகாலமும் இருப்பதாக! ஆமென்.*

*அன்புடன் ஆசிரியர்*

இருக்கிறது (எபி.12:2). நாமகரண சபைகள் (பிரிவினை சபைகள்) பூமிக்குரிய மைய தலைமை அலுவலகங்களை உடையவைகளாக இருக்கின்றன. தலைமையாய் இருக்கிறவர் இம்மையங்களில் வசித்து நாமகரண சபைகளின் எல்லா பாகங்களையும் கட்டுப்படுத்துகிறவராக இருக்கிறார். இது கர்த்தருடைய சபைக்கும், மனுஷரால் தோற்றுவிக்கப்பட்ட சபைக்கும் இடையேயான மற்றொரு வேற்றுமையை வெளிப்படுத்துகிறது. பெரிய சபை கூட்டமைப்பு அல்லது பள்ளி கூட்டமைப்பு என்பது கர்த்தருடைய சபைக்கு மையமாக இருக்கிறதில்லை. ஒரு பகுதியில் தோன்றிய முதல் பிராந்திய சபையானது மற்ற சபைகளைப் பார்க்கிலும் அதிகமுக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறதில்லை. எந்த பூமிக்குரிய தலைமை அலுவலகத்திற்கும் கட்டணம் செலுத்த வேண்டியதில்லை. எந்த மையமும் பிரசங்கியார்களை வெளியே அனுப்புகிறதோ அல்லது அவர்களுடைய ஸ்தானத்தை மாற்றுகிறதோ இல்லை. எல்லா அங்கத்தினர்களும் ஒரு பிரிவில் ஒன்று சேர்ந்துவந்து ஒழுங்காக சம்பிரதாயமாக ஏற்படுத்தப்பட்ட கூட்டங்களை நடத்தி சபைகளுக்கான கொள்கைகளை தீர்மானம் செய்வதற்கான எந்த இடமும் இல்லை. இதற்கு பதிலாக கிறிஸ்து தலையாயிருக்கிற பரலோகமே கிறிஸ்துவின் சபையாரின் மையமாக இருக்கிறது.

**3. முழு சபையை வடிவமைப்பதற்கான எந்த முயற்சியும் பாவம்.**

மனுஷரும் பிராந்திய சபைகளும் ஒருவேளை கர்த்தருடைய சபைக்கு ஒரு நாம சபையாரின் ஆளுகையை அளிக்க முயற்சி செய்யலாம். ஒரு பெரிய சபையானது அதன் பகுதியில் உள்ள சிறிய சபைகளை ஒருவேளை ஆளுகை செய்ய முயற்சிப்பார்கள். இந்த ஆசையானது முழு சபையையும் பல நாடுகளில் ஒழுங்குபடுத்தும்படி வழிநடத்தக் கூடும். ஏனென்றால் அநேக அங்கத்தினர்கள் முன்பு நாமகரண சபைக் கூட்டங்களிலே இருந்தவர்கள். அவர்களுக்கு தங்களுடைய மனித சபை ஆளுகைகளை மறந்துவிடுவது என்பது மிகவும் கடினமாக இருக்கிறது. அவர்கள் பெரிய சம்பிரதாயமாக நடத்தப்படும் கூட்டங்களை விரும்புகிறார்கள். மனுஷர் பல சபைகளை கட்டுப் படுத்த விரும்புகிறார்கள். அவர்கள் தங்களை சுற்றிலும் இருக்கிற நாமகரண சபையாரைப் போன்று அவர்கள் ஸ்தாபனங்களையும் அதிகாரம் செலுத்தும் உத்தியோகஸ்தர்களையும் விரும்புகிறார்கள். ஆனால் இத்தகைய காரியங்கள் உண்மையான சபை அமைப்பை மீறுகின்றன அவைகள் வேதாகமத்தில் காணப்படுகின்ற மெய்யான சபை ஆளுகைகளை கெடுத்துப்போடுகின்றன. நாம் கிறிஸ்துவின் வார்த்தையாகிய அவருடைய உபதேசத்துக்கு அப்பால் ஒரு போதும் செல்ல வேண்டாம் (2யோவா.9) நாம் சுவிசேஷத்தை மாற்ற துணிகிறது இல்லை (கலா.1:6-9) நாம் வேதாகமத்தின் திட்டத்திற்கு மாறாக அதனோடே ஒன்றையும் கூட்டவோ அல்லது அதிலிருந்து எதையாகிலும் எடுத்துப்போடவோ வேண்டாம் (வெளி.22:18,19). முழு சபையை வடிவமைப்பதற்கான எந்த முயற்சியும் பாவமே.

**கேள்விகள்**

1.சபைக்கு தலையாயிருக்கிறவர் எங்கே ஜீவிக்கிறார்? ----------------

2. கிறிஸ்துவின் சபை மாவட்டங்களில் பிரிந்து இருக்கிறதா? --------------



## உங்களுக்குத் தெரியுமா?

Do you Know?

–ஆசிரியர்

1. பாவஞ்செய்த தூதர்களைத் தேவன் தப்பவிடாமல், அந்தகாரச் சங்கிலிகளினாலே கட்டி நரகத்திலே தள்ளி நியாயத்தீர்ப்புக்கு வைக்கப்பட்டவர்களாக ஒப்புக்கொடுத்து... (2பேது.2:4).

2. பூர்வ உலகத்தையும் தப்பவிடாமல், நீதியைப் பிரசங்கித்தவனாகிய நோவா முதலான எட்டுப்பேரைக் காப்பாற்றி, அவபக்தியுள்ளவர்கள் நிறைந்த உலகத்தின்மேல் ஜலப்பிரளயத்தை வரப்பண்ணி... (2பேது.2:5).

3.சோதோம் கொமோரா என்னும் பட்டணங்களையும் சாம்பலாக்கிக் கவிழ்த்துப்போட்டு, ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்து, பிற்காலத்திலே அவபக்தியாய் நடப்பவர்களுக்கு அவைகளைத் திருஷ்டாந்தமாக வைத்து... (2பேது.2:6).

4.கர்த்தர் தேவபக்தியுள்ளவர்களைச் சோதனையினின்று இரட்சிக்கவும், அக்கிரமக்காரரை ஆக்கினைக்குள்ளானவர்களாக நியாயத்தீர்ப்பு நாளுக்கு வைக்கவும் அறிந்திருக்கிறார் (2பேது.2:9).

5. இப்பொழுது இருக்கிற வானங்களும் பூமியும் அந்த வார்த்தையினாலேயே அக்கினிக்கு இரையாக வைக்கப்பட்டு, தேவ பக்தியில்லாதவர்கள் நியாயந்தீர்க்கப்பட்டு அழிந்துபோகும் நாள்வரைக்கும் காக்கப்பட்டிருக்கிறது (2பேது.3:7).

6. கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள்மேல் நோக்கமாயிருக்கிறது, அவருடைய செவிகள் அவர்கள் வேண்டுதலுக்குக் கவனமாயிருக்கிறது; தீமைசெய்கிறவர்களுக்கோ கர்த்தருடைய முகம் விரோதமாயிருக்கிறது (1பேது.3:12).

7. அன்றியும், பட்சபாதமில்லாமல் அவனவனுடைய கிரியைகளின்படி நியாயந்தீர்க்கிறவரை நீங்கள் பிதாவாகத் தொழுதுகொண்டுவருறகிபடியால் இங்கே பரதேசிகளாய்ச் சஞ்சரிக்குமளவும் பயத்துடனே நடந்துகொள்ளுங்கள் (1பேது.1:17).

8. அழிந்துபோகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும்; அதைப்பார்க்கிலும் அதிக விலையேறப்பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு, இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்குப் புகழ்ச்சியும் கனமும் மகிமையுமுண்டாகக் காணப்படும் (1பேது.1:7).

9.அவர் (இயேசு) உலகத்தோற்றத்திற்கு முன்னே குறிக்கப்பட்டவராயிருந்து, தமது மூலமாய்த் தேவன்மேல் விசுவாசமாயிருக்கிற உங்களுக்காக இந்தக் கடைசிக் காலங்களில் வெளிப்பட்டார் (1பேது.1:20).

10. இப்படி இவைகளெல்லாம் அழிந்துபோகிறதாயிருக்கிறபடியால் நீங்கள் எப்படிப்பட்ட பரிசுத்த நடக்கையும் தேவபக்தியும் உள்ளவர்களாயிருக்க வேண்டும்! (2பேது.3:11).

11. தேவனுடைய நாள் சீக்கிரமாய் வரும்படிக்கு மிகுந்த ஆவலோடே காத்திருங்கள்; அந்த நாளில் வானங்கள் வெந்து அழிந்து, பூதங்கள் எரிந்து உருகிப்போம் (2பேது.3:12).

12. ஆகையால், பிரியமானவர்களே, இவைகள் வரக் காத்திருக்கிற நீங்கள் கறையற்றவர்களும் பிழையில்லாதவர்களுமாய்ச் சமாதானத்தோடே அவர் சந்நிதியில் காணப்படும்படி ஜாக்கிரதையாயிருங்கள் (2பேது.3:14).

இதற்குமேல் நான் ஒரு விளக்கம் கொடுக்க விரும்பவில்லை ஏனென்றால் பேதுரு மேலும் சொல்லும்போது; "ஒருவன் போதித்தால் தேவனுடைய வாக்கியங்களின்படி போதிக்கக்கடவன்; ஒருவன் உதவிசெய்தால் தேவன் தந்தருளும் பெலத்தின்படி செய்யக்கடவன்; எல்லாவற்றிலேயும் இயேசுகிறிஸ்துமூலமாய்த் தேவன் மகிமைப்படும்படியே செய்வீர்களாக; அவருக்கே மகிமையும் வல்லமையும் சதாகாலங்களிலும் உண்டாயிருப்பதாக. ஆமென்" (1பேது.4:11) என்கிறார்.

**வேதகம கேள்விகள்**

வேத வசன ஆதாரத்துடன் பதில் கொடுக்கவும்

ஆம் எனில் ☑ குறியிடவும்



**தற்சோதனை பகுதி - 25**

**25. புத்தி விளைகிற இடம் எது?**

1. அது ஜீவனுள்ளோருடைய தேசத்திலே அகப்படுகிறதில்லை ☐ வசன ஆதாரம் ------------------------------------------------------------

2. புத்தியைச் சம்பாதிக்க முடியாது ☐ வசன ஆதாரம் ---------
------------------------------------------------------------

3. ஆழமானது அது என்னிடத்தில் இல்லையென்கிறது ☐ வசன ஆதாரம் ------------------------------------------------------------

4. தன் உதடுகளை மூடுகிறவன் புத்திமானல்ல ☐ வசன ஆதாரம் -
------------------------------------------------------------

5. நாசமும் மரணமும், நாங்கள் எங்கள் காதுகளினாலே மாத்திரம் அதின் கீர்த்தியைக் கேட்டோம் என்கிறது ☐ வசன ஆதாரம் ---------

6. மூடரின் வாயோ புத்தியைக் கக்கும் ☐ வசன ஆதாரம்----------

7. அதின் ஸ்தானம் அவருக்கே தெரியும் ☐ வசன ஆதாரம்----------

8. அதை வாங்க முடியாது ☐ வசன ஆதாரம்----------

9. பொல்லாப்பை விட்டு விலகுவதே புத்தி ☐ வசன ஆதாரம் ---------

10. புத்தியைக் காக்கிறவன் ஒரு நன்மையும் அடையான் வஞ்சிக்க முடிவில்லை ☐ வசன ஆதாரம் ---------

**இது உங்களுக்கான தற்சோதனை: சரியானதைக் கண்டுபிடித்து குறியிடுங்கள்**

**வசன ஆதாரத்துடன் குறித்துவைத்துக்கொள்ளுங்கள். மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ளுங்கள்.**

**இப்பகுதியை ஜெராக்ஸ் எடுக்கலாம் ஆனால் வெட்டியெடுப்பது குற்றம்.**

**இதை எங்களுக்கு அனுப்ப வேண்டாம். இது ஒரு வேதாகம ஆராய்ச்சி!**




**JOIN OUR**

**WORLD EVANGELISM BIBLE SCHOOL**

**RIGHT NOW**

*Contact Us: 94435 58041*

'ஒரே வழி' வேதபாடம் **The Master Course** படிக்க விரும்புகிறவர்கள்


இன்றே தபால் செலவுக்காக ரூபாய் 50-ஐ அனுப்பி,

ஒரு வருடத்தில் பயின்று **Certificate** பெற்றுக்கொள்ளுங்கள் வயது: 20 க்கு மேல்.

**Batlagundu Bible College, P.O. Box No. 5,**

**Batlagundu-624 202, South India.**




## வேதவாக்கியங்களின்படி கிறிஸ்துவின் சபையாரின் அமைப்பு

- Jim Massey

*– மொழியாக்கம் சகோ.ரவிஆசீர்*

**பாடம் -7**

**முழு சபையானது எவ்வாறு வடிவமைக்கப்பட்டிருக்கிறது?**

**வரைகுறிப்பு**

**1. பூமியிலே ஆளுகை இல்லை**

**2. பூமியிலே தலைமை அலுவலகம் இல்லை**

**3. முழு சபையை வடிவமைப்பதற்கான எந்த முயற்சியும் பாவம்**

**கலந்துரையாடல்**

**1. பூமியிலே ஆளுகை இல்லை.**

முழு சபை அல்லது கிறிஸ்துவின் சரீரத்திற்கு ஆளுகை அமைப்பு இல்லை. இதற்கு ஒரு பரலோக தலைமையும், பரலோக ஆளுகையும் (அதிகாரம்) இருக்கிறது (மத்.28:18). இந்த வகையிலே இது நாமகரண சபைகளிலிருந்து வேறுபட்டதாக இருக்கிறது. அவர்களுக்கு ஒரு போப் அல்லது ஆர்ச் பிஷப் போன்ற ஒரு பூமிக்குரிய தலைமை இருக்கிறது. அவர்களுடைய அதிகாரம், வினா விடை வகையிலான வேத போதனை, ஆலோசனை சங்கங்களினால் எழுதப்பட்ட ஜெபபுத்தகங்கள் இவைகளெல்லாம் மனுஷருடைய அதிகாரத்தினால் எழுதப்பட்டவைகள், ஆண்டு தோறும் சிறப்பு கூட்டங்களையும் நடத்துவார்கள். ஆனால் வேதாகமம் எந்த மனுஷனையும் தலை என்று அழைக்கிறதில்லை ஆனால் கிறிஸ்துவே தலையாயிருக்கிறார் (எபே.1:21-23). கிறிஸ்துவின் சரீரத்திற்கு எல்லா அங்கத்தினர்களுக்கும் மேலாக அதிகாரிகளைக் கொண்ட பூமிக்குரிய ஆளுகை அமைப்பு இல்லை. அதற்கு மாவட்டங்கள் அல்லது ஆலோசனை சபைகள் அல்லது பிரிவுகள் இல்லை. இதன் அங்கத்தினர்கள் கன்வென்ஷன் (சம்பிரதாயமாக ஏற்படுத்தப்பட்ட கூட்டங்கள்) நடத்தி ஒன்று சேர்ந்து அதன் காரியங்களை தீர்மானம் செய்கிறதில்லை. இவைகள் அனைத்துமே கேடு பாடானவைகளும் மனுஷர் கொண்டுவந்த மாற்றங்களாகவும் இருக்கின்றன மற்ற அங்கத்தினர்களுடன் எந்த ஒரு பூமிக்குரிய தொடர்புக்கும் பதிலாக சகல கிறிஸ்தவர்களும் ஒருவர் மற்றொருவருடனும், கிறிஸ்துவுடனும் ஐக்கியமாக இருக்கிறார்கள். ஒவ்வொரு கிறிஸ்தவனும், ஒவ்வொரு பிராந்திய சபையும் சுதந்திரமானவர்களாகவும், கிறிஸ்துவின் கீழ் சுயாதீனம் உள்ளவர்களாகவும் இருக்கிறார்கள். முழு சபை அல்லது கிறிஸ்துவின் சரீரத்திற்கு எந்த ஒரு ஆளுகையோ அல்லது ஸ்தாபனமோ பூமியில் இல்லை.

**2. பூமியில் தலைமை அலுவலகம் இல்லை.**

ஒரு தலைமை அலுவலகம் என்பது ஒரு தலைமையானவருடைய வாசஸ்தலமாக இருக்கிறது. இயேசு மாத்திரமே அவருடைய சபைக்கு தலையாக இருக்கிறார் என்பதினால், பரலோகம் மாத்திரமே அதின் தலைமை அலுவலகமாக